*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*10 (1), 2017*

# திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள்

***Lareef Sulaiman[1] & Fareena Ruzaik[2]***
[1] Independent Researcher
[2]*Senior Lecturer, Department of Geography, University of Colombo.*

Correspondence: [1]*lareefsulaiman@gmail.com* **&** [2]*fareena@geo.cmb.ac.lk*

**ஆய்வுச் சுருக்கம்**

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கும் குறையாத காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். இவற்றில், 80மூ மானவை காணி உரிமம் பெற்றுக் கொடுக்கப்படாத காணிகளால் ஏற்பட்ட பிரச்சினைகளாகும். 2009 இலங்கை உள்நாட்டுப் போர் முறியடிப்பைத் தொடர்ந்து, 2000 இற்குப் பிற்பட்ட காலங்களில் வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் எல்லைப்படுத்தலுக்குள் காணிகள் உட்படுத்தப்பட்டன. அவ்வாறே, யுத்தம் காரணமாக எல்லைப் பிரதேசங்களிலிருந்த குடியிருப்பு நிலங்களும் விவசாய மற்றும் தோட்டக் காணிகளும் பாழடைந்து, தரிசு நிலங்களாகவும் காடுகளாகவும் காணப்பட்டிருந்த அன்றைய சூழலில் இராணுவப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்குள்ளும் உட்படுத்தப்பட்டமையால், இக்காணிகளை விடுவிப்பதற்கு அவற்றுக்குரிய சட்ட ரீதியான ஆவணங்கள், உரித்துரிமைகள் இல்லாததால் பெரும் சவால்களையே சந்திக்க நேர்ந்தது. இவ் ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவாக காணிப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் ஒன்பது காரணிகள் இனங்காணப்பட்டன: காணி உரிமம் வழங்கப்படாமை, அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல், இராணுவ முகாம் அதிகரிப்பு, விகாரைக் காணிக் கோரிக்கை, காணி அபகரிப்பு, இன ரீதியான நிருவாகம், ஒருதலைப்பட்சம், அதிகார துஃபிரயோகம், பொதுமக்கள் அறிவீனம் என்பன அவை. இவ் ஆய்வை மேற்கொள்வதற்கு நிகழ்தகவற்ற மாதிரி எடுப்பு முறைமை தெரிவு செய்யப்பட்டது. அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளும் விவரணப் பகுப்பாய்வு முறைமையும் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** காணி உரிமம், காணி உரிமை மறுப்பு, காணிப் பிரச்சினை, அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல், காணி விடுவிப்பு, ஆவணங்கள்.

## 1.1 அறிமுகம்

இலங்கை உள்நாட்டுப் போர் முறியடிப்பையடுத்து வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளில் பிரதானமானது காணிப் பிரச்சினை. அதிலும், திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் தொடர்ந்தேச்சியான காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர். இவர்கள் எதிர்கொண்ட காணிப் பிரச்சினைகளை பிரதானமாக மூன்று வகைக்குள் உட்படுத்தலாம்.

01. குடியிருப்பு மற்றும் விவசாய-தோட்டக் காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் இல்லாமையால் ஏற்படும் பிரச்சினைகள்.
02. அனுமதிப் பத்திரமுள்ள காணிகளுக்கு அளிப்பு (உறுதி) பத்திரங்கள் வழங்கப்படாமையால் ஏற்படும் பிரச்சினைகள்.
03. அரசாங்கத்தின் எல்லைப்படுத்தலுக்குள் அகப்பட்டுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகள்.

இங்குள்ள எல்லா வகையான பிரச்சினைகளுக்கும் மூலவேராக இருப்பது காணி உரிமம் இல்லாதிருப்பதாகும். காணி உரிமம் அல்லது உரிமை மறுப்பு மக்களுக்கெதிரான சட்டச் சிக்கல்களைத் தோற்றுவித்தது. காணி உரிமை பெற்றுக் கொடுக்கக்கூடிய பொறுப்பிலுள்ள பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம், மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் ஆகியவற்றின் அசமந்தப் போக்குகளால் இம்மக்கள் நாளுக்கு நாள் காணிப் பிணக்குகளை சந்தித்தனர். 2000, 2002, 2008, 2011, 2018 ஆகிய காலப் பகுதிகளில் காணிக் கச்சேரிகள் இடம்பெற்றும் இவர்கள் ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். இதனால், காணி உரிமை அளிக்கப்படாத இடங்களிலெல்லாம் சட்டச் சிக்கல்களுக்குட்பட்ட காணிப் பிரச்சினைகளே புதிது புதிதாகத் தோற்றம் பெற்றன.

மூன்று தசாப்த உள்நாட்டு யுத்தத்தால் திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேச எல்லைக் கிராமங்களும் விவசாய-தோட்டக் காணிகளும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாமல் தரிசுநிலங்களாகக் காணப்பட்டன. காடுகளாகவோ, புதர்களாகவோ காணப்பட்ட அச்சூழலில், 2000 ஆண்டுக்குப் பின் அரசாங்கத்தால் வர்த்தமானி அறிவித்தல் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம் வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அரச காணிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு முழுமையாக வழங்கப்பட்டது (உதாரணம், 2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கை).

யுத்த இடப்பெயர்வு காரணமாக பாழ் கிடந்த எல்லைக் கிராமங்களும் காடுகளாக மண்டிக்கிடந்த விவசாய-தோட்டக் காணிகளும் ‘காடு’ என்ற வரையறைக்குள் உட்படுத்தப்பட்டு, இத்திணைக்களத்தினால் எல்லைக்கற்கள் நடப்பட்டன. 2009 க்குப் பின் நாட்டில் நிலவிய சுமுகமான சூழலையடுத்து, காணிச் சொந்தக்காரர்கள் தத்தமது காணிகளை துப்புரவு செய்து மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் தருணத்தில், வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, சிலர் வழக்குத்தாக்கலுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

மேலும், தொல்பொருள் திணைக்களத்தின் எல்லைப்படுத்தலுக்கும் இராணுவப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்குள்ளும் உட்படுத்தப்பட்டமையால், இக்காணிகளை விடுவிப்பதற்கு அவற்றுக்குரிய சட்ட ரீதியான ஆவணங்கள், உரித்துரிமைகள் இல்லாததால் பெரும் சவால்களையே சந்திக்க நேர்ந்தது. இதனால், சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கும் குறையாத காணிப் பிரச்சினைக்கு இம்மாவட்ட முஸ்லிம்கள் முகங்கொடுத்தனர். இவற்றில், 80% மானவை காணி உரிமம் பெற்றுக் கொடுக்கப்படாதவையாகும் (மூலம்: கலந்துரையாடல்).

### 1.2 பிரதான நோக்கம்

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான காரணங்களை இனங்காண்பதும், தீர்வுக்கான பரிந்துரைகளை முன்வைத்தலும்.

#### 1.2.1 உப நோக்கங்கள்

- காணிப் பிரச்சினைகள் மற்றும் தொடர்புடைய காரணிகளை இனங்காணல்.
- காணிப் பிரச்சினையுடன் தொடர்புபட்ட தெளிவின்மைகளைப் போக்குதல்.
- காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்

### 1.3 இலக்கிய மீளாய்வு


இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக, ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், குறிப்புக்கள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், எழுத்துமூல ஆவணங்கள் என பல வெளியீடுகளையும் பெற்று இலக்கிய மீளாய்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணிப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் காரணிகள் குறித்து அனுபவமும் ஆற்றலுமுடையோரின் எண்ணக்கரு விளக்கங்கள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் போன்ற பல்வேறு விடயங்கள் இதற்குத் துணை புரிந்தன.

இலங்கையில் காணிப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், ஒன்றில் இனம் அல்லது மதத்துவம் பின்னணியாகச் செயற்படும், பல சிக்கல்கள் நிறைந்த விடயப் பரப்பாகவும் இனவாதப் பிரச்சினையுடன் கலந்த, ஒரு தெளிவற்ற சிந்தனைப் போக்காகவும் நோக்கப்படுகிறது. ஜோர்ஜ் ப்கரெக்ஸ், பார்ட் க்ளெம் ஆகியோரால் தொகுக்கப்பட்ட, 'பல்வகையினைக் கையாளுதல்: இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்' என்ற நூலின் 'தென்னிலங்கையின் கருத்துநிலைகள்' எனும் கட்டுரை (2004: 65), ''ஒரு குழுவினர் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படுவதை கடுமையாக எதிர்க்கின்றனர். கடந்த காலத்தில் முழு இலங்கையிலும் சிங்களவர்களே வசித்தார்கள் என இவர்கள் வாதிடுகின்றனர்'' என்ற கூற்றிலிருந்து இனவாத சிந்தனைப் போக்குகள் காணிப் பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்துள்ளதை அறிந்து கொள்ளலாம்.

இலங்கை உள்நாட்டுப் போருக்குப் பின்னர், திருகோணமலை மாவட்டத்தில் காணிப் பிரிச்சினை பிரதான இடத்தைப் பெற்றது. இது குறித்த ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் தீர்மானங்களும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பிரச்சினைகள் தீரவில்லை. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 'வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முரண்பாட்டுக்குப் பிந்திய, அரச காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மீதான துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்' என்ற பெயரில் 2013 இல் வெளியிட்டுள்ள ஆய்வு வெளியீடானது, வடக்கு-கிழக்கிலுள்ள காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான அரசாங்கத்தின் மிகப் பிந்திய முயற்சியின் நிகழ்ச்சித் திட்டமாகவும் வடக்கு-கிழக்கிலுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்த்து வைக்கும் முகமாக இரண்டு வருடங்களில் அமுல்படுத்தப்பட வேண்டிய செயன்முறையாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறு, காணிப் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளும் பதிவுகளும் தொகுப்புகளும் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், அடிக்கடி முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் பற்றியும் இப்பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற காரணிகள், அதிலுள்ள சட்டச் சிக்கல்கள், இந்த சட்டச் சிக்கல்களுக்குத் துணைநிற்கும் இறுக்கமான சுற்றறிக்கைகள் போன்றவற்றை தெளிவுபடுத்துவதனூடாக, இப்பிரச்சினைக்குரிய தீர்வைப் பெறுவது குறித்த ஆய்வுத் தேவை உணரப்பட்டதால் ஆய்வாளரகள் இத்தலைப்பைத் தெரிவு செய்துள்ளனர்.

### 1.4. ஆய்வுப் பிரதேசம்




Source:https://bit.ly/3a37fm5 (2017.01.20 - 10.00am)

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வென்ற வகையில், திருகோணமலை மாவட்டத்திலுள்ள பட்டினமும் சூழலும், குச்சவெளி, பதவிசிறிபுர, கோமரங்கடவெல, மொரவெவ, தம்பலகாமம், கந்தளாய், கிண்ணியா, சேருவில, மூதூர், வெருகல் ஆகிய *11* பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், காணிப் பிரச்சினைக்கு அடிக்கடி முகங்கொடுத்துள்ள குச்சவெளி, பட்டினமும் சூழலும், தம்பலகாமம், கிண்ணியா, மூதூர் ஆகிய *5* பிரசேதங்கள் ஆய்வுப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த *5* பிரதேசங்களும் மாதிரி எடுப்பாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.5 ஆய்வு முறையியல்

விபரண ரீதியான ஆய்வு முறைமை இங்கு பின்பற்றப்பட்டுள்ளது. விபரண ரீதியான ஆய்வென்பது ஒரு பிரச்சினை தொடர்பான பூரண தரவுகளைப் பெற்று அதனை விபரித்து, அதற்கான விளக்கத்தினை வழங்கும் ஆய்வாகும். இதனடிப்படையில், உள்நாட்டுப் போர் முறியடிப்பிற்குப் பின்னர் திருகோணமலை மாவட்டத்தில் என்னென்ன வகையான காணிப் பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன என்பது குறித்து கடந்த காலத்துடன் தொடர்புபடுத்தி ஆராயப்பட்டுள்ளது.

இதற்காக நிகழ்தகவற்ற மாதிரி எடுப்பு முறைமை தெரிவு செய்யப்பட்டு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு எடுக்கப்பட்டுள்ள மாதிரிகள் மொத்தக் குடியையும் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் பெறப்பட்டுள்ள முடிவுகள் மொத்தக் குடிகளுக்கும் பொதுவானவையாகவும் காணப்படுகின்றன.

இவ் ஆய்வில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவுசார் தரவுகளாக பிரதேச ரீதியாக சனத்தொகை, காணிப் பரப்பளவு, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை என்பவும் பண்புசார் தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானம், மறைமுக அவதானம், கள விஜயம், கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட எழுத்து வடிவிலான தரவுகள் அடங்கும். இவற்றின்போது புகைப்படங்கள் எடுக்கப்பட்டமையும் ஆய்வு முறையியலின் ஒரு நுட்பமாகும்.

### 1.6 தரவு சேகரிப்பும் நுட்பங்களும்

இங்கு முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள், மூன்றாம் நிலைத் தரவுகள் என்பன ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், காணி உத்தியோகத்தர்கள், காணி விடயத்துடன் தொடர்புபட்ட பிரமுவர்கள் போன்றோருடனான நேர்காணல், கலந்துரையாடல்கள் மூலமும் காணிப் பிரச்சினைக்குட்பட்ட மக்களிகளிடம் கொடுக்கப்பட்ட கேள்வித்தாள் கணக்கெடுப்பு மற்றும் கலந்துரையாடல்கள் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. இவற்றின்போது ஒளி மற்றும் ஒலிப் பதிவுகளும் தரவு சேகரிப்பு நுட்பங்களாகக் கைளாப்பட்டமை குறிப்பாகும்.

இரண்டாம் நிலைத் தரவுகள் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள், தடையுத்தரவுக் கடிதங்கள், புள்ளிவிபரங்கள், வரைபடங்கள் என்பவற்றிலிருந்தும் மூன்றாம் நிலைத் தரவுகள் இணையதளம் தரவுத்தளத்திலிருந்தும் பெறப்பட்டவை. இவ் ஆய்வுத் தலைப்புடன் தொடர்பான களஞ்சியப்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகள் மிக அரிதாகக் காணப்பட்டமையால் இங்கு முதலாம் நிலைத் தரவுகளே அதிகம் கையாளப்பட்டுள்ளன. ஆய்விற்காக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு விவரணப் பகுப்பாய்வு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7 கலந்துரையாடல்

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கும் குறையாத காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். இவற்றில், 80மூ மானவை காணி உரிமம் அளிக்கப்படாததால் ஏற்பட்ட பிரச்சினைகளாகும். பிரதேச-மாவட்ட செயலகங்களால் காணி உரிமை அளிக்கப்படாமை, யுத்த இடப்பெயர்வால் ஆவணங்கள் தொலைந்து போனமை முதலானவற்றை காரணங்களாகக் குறிப்பிட்டாலும், சட்ட ரீதியான ஆவணங்களிருந்தும் அரசாங்கத்தின் எல்லைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள காணிகள் கூட விடுவிக்கப்படவில்லை.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் காணிப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு பின்வருவன காரணிகளாகும்:

#### 1.7.1 காணி உரிமம் வழங்கப்படாமை

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் 80% மான காணிகளுக்கு இன்னும் காணி உரிமம் அளிக்கப்படவில்லை (அட்டவணை: 1.7.1). 5% இற்கும் குறைவான காணிகளுக்கே அளிப்புப் பத்திரங்கள் (உறுதிகள்) வழங்கப்பட்டுள்ளன. புல்மோட்டையில் 13 அளிப்புப் பத்திரங்களைத் தவிர, ஜெயபூமி, றன்திம போன்ற திட்டங்களின் கீழ் எந்தவொரு பத்திரமும் வழங்கப்படவில்லை என்பது இதற்கு உதாரணமாகும். இதுவரை 2000, 2002, 2008, 2011, 2018 ஆகிய காலப் பகுதிகளில் காணிக் கச்சேரிகள் இடம்பெற்றும் காணி உரிமம் வழங்கப்படாது இம்மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர்.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணித் துண்டொன்று அரச தேவைக்காகச் சுவீகரிக்கப்படும் சமயத்தில், அது உறுதிக் காணியாக இருந்தால் மட்டுமே மாற்றுக் காணியோ, ந‘டயீட்டுத் தொகையோ வழங்கப்படும். காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் (Land Development Ordinance) கீழ் வழங்கப்பட்டுள்ள LDO

பத்திரமுள்ள காணியாக இருந்தாலும் அக்காணியில் இடம்பெற்றுள்ள அபிவிருத்தி வேலைகளுக்குரிய செலவினத்தைக் கணக்கிட்டு வழங்கப்படுமே அல்லாமல், மாற்றுக் காணியோ அல்லது காணிக்குரிய நஷ்டயீடோ வழங்கப்பட மாட்டாது என்பது காணிச் சட்டத்திலுள்ள விடயமாகும் (வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகம், 2005).

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு பரம்பரைக் காணியானது ஒவ்வொரு தலைமுறையிலும் பல தடவைகள் காணி உரிமம் கோரி விண்ணப்பம் செய்யப்பட்ட காணியாகவே காணப்பட்டது. ஒவ்வொரு (முஸ்லிம்) பிரதேசத்திலும் 80% இற்கும் குறையாத காணிகள், உரிமம் வழங்கப்படாத நிலையிலேயே காணப்பட்டன. இதனால், திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எங்கெல்லாம் காணி உரிமம் அளிக்கப்படவில்லையோ அங்கெல்லாம் சட்டச் சிக்கலுக்குட்பட்ட காணிப் பிரச்சினைகளே தோற்றம் பெற்றன.

**அட்டவணை: 1.7.1 காணி உரிமம் வழங்கப்படாத பிரதேசங்கள்**

| இல | காணிப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் | பாதிப்புக்கு உப்பட்டுள்ள காணிகள் (ஏக்) |
|---|---|---|
| | **குச்சவெளி** | |
| 01. | காசிம் நகர் | தரவு பெறப்படவில்லை |
| 02. | ஜாயா நகர் | தரவு பெறப்படவில்லை |
| 03. | இலந்தைக் குளம் | 300 ஏக்கர் |
| 04. | புளியடிக்கண்டல் | தரவு பெறப்படவில்லை |
| 05. | சமுளன் குளம் | 312 ஏக்கர் |
| 06. | செஞ்சாளி, பெரிய குளம் | 378 ஏக்கர் |
| 07. | கைநாட்டான் | 348 ஏக்கர் |
| 08. | பெரிய குளம் (பொய்கைக் குளம்) | 41 குடும்பங்களுக்குரிய காணி |
| 09. | இலுப்பைக் குளம், அணைக்கட்டு | 50 குடும்பங்களுக்குரிய காணி |
| 10. | கரையான் பிளவு | தரவு பெறப்படவில்லை |
| 11. | காஞ்சிரம் குளம் | தரவு பெறப்படவில்லை |
| 12. | பேரில்லாக் குளம் | தரவு பெறப்படவில்லை |
| 13. | ஒட்டுக் குளம் | தரவு பெறப்படவில்லை |
| 14. | குச்சவெளியான் குளம் | தரவு பெறப்படவில்லை |
| 15. | கடையாணிக் கல்லடி | தரவு பெறப்படவில்லை |
| 16. | செம்பாடு | தரவு பெறப்படவில்லை |
| 17. | பள்வெக்கைக் குளம் | 52 குடும்பங்களுக்குரிய காணி |
| 18. | இறக்கக்கண்டி தோட்டக் காணி | 4 1/2 ஏக்கர் |

| | **புல்மோட்டை பிரதேசம்** | |
|---|---|---|
| 19. | பொன்மலைக்குடா (அரிசிமலை) | 903 ஏக்கர் |
| 20. | மண்கிண்டிமலை | 500 ஏக்கர் |
| 21. | கண்ணீராவி பிலவு | 250 ஏக்கர் |
| 22. | ஆண்டாங்குளம் | 350 ஏக்கர் |
| 23. | சாத்தானமடு | 500 ஏக்கர் |
| 24. | காட்டுத் தென்னை முறிப்பு | 400 ஏக்கர் |
| 25. | தோண்டாம் முறிப்பு | 300 ஏக்கர் |
| 26. | ஸபா நகர் (ஓடாமலை) | 60 ஏக்கர் |
| | **மூதூர் பிரதேசம்** | |
| 27. | உப்புக்காச்சுமடு | 300 ஏக்கர் |
| 28. | வேதத்தீவு | 1300 ஏக்கர் |
| 29. | குளத்தடிச்சேனை சந்தனவெட்டை) | 112 ஏக்கர் |

*மூலம்: கள ஆய்வு (2017.03.16) அடிப்படையில் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட அட்டவணை*

### 1.7.2 அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல்

30 வருடக் கோர யுத்தத்தால் திருகோணமலை மாவட்டத்தில் பல பிரதேச எல்லைக் கிராமங்களும் விவசாய-தோட்டக் காணிகளும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாமல் தரிசுநிலங்களாகவும் பாழ் குடியிருப்புகளாகவும் காணப்பட்டன. காடுகளாகவோ, புதர்களாகவோ காணப்பட்ட அச்சூழலில் குறிப்பாக, 2000 ஆண்டுக்குப் பின் அரசாங்கத்தால் வர்த்தமானி அறிவித்தல், சுற்றறிக்கைகள் மூலம் வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அரச காணிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு முழுமையாக வழங்கப்பட்டது (உதாரணம், 2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கை).

யுத்த இடப்பெயர்வு காரணமாக பாழ் கிடந்த எல்லைக் கிராமங்களும் காடுகளாக மண்டிக்கிடந்த விவசாய-தோட்டக் காணிகளும் ‘காடு’ என்ற வரையறைக்குள் இணைக்கப்பட்டு, இத்திணைக்களத்தின் எல்லைப்படுத்தலுக்குள் உட்படுத்தப்பட்டன (அட்டவணை: 1.7.2). 2009 க்குப் பின் நாட்டில் நிலவிய சுமுகமான சூழலையடுத்து, காணிச் சொந்தக்காரர்களும் குடியிருப்பாளர்களும் தத்தமது காணிகளை துப்புரவு செய்து மீண்டும் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் தருணத்தில், வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு, சிலர் வழக்குத்தாக்கலுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

அவ்வாறே, தொல்பொருள் திணைக்களத்தினாலும் ஏழை விவசாயிகளின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எல்லைப்படுத்தப்பட்டன (உதாரணம், தோப்பூர் செல்வநகர் மற்றும் புல்மோட்டை அரிசிமலை).

**அட்டவணை: 1.7.2 அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல் மூலம் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்**

| | காணிப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் | பாதிக்கப்பட்டுள்ள காணிகள் (ஏக்) | பிரச்சினைக்குரிய காரணிகள் |
|---|---|---|---|
| | **திருகோணமலை நகர்** | | |
| | முத்துநகர் | 1000 ஏக்கர் | துறைமுக அதிகார சபை |
| | **புல்மோட்டை** | | |
| | பிலால் நகர் (முகத்துவாரம்) | 80 ஏக்கர் | பாதுகாப்பு வலைய பிரகடனம் |
| | **நிலாவெளி** | | |
| | ரசூல் தோட்டம் | 64 ஏக்கர் | சுற்றுலாத் துறை |
| | **கிண்ணியா** | | |
| | சுண்டியாறு | 1200 ஏக்கர் | வனப் பாதுகாப்பு திணைக்களம் |
| | கல்லறப்பு | 1200 ஏக்கர் | வனப் பாதுகாப்பு திணைக்களம் |
| | தளவாய் | 2500 ஏக்கர் | வனப் பாதுகாப்பு திணைக்களம் |
| | **மூதூர்** | | |
| | குளத்தடிச்சேனை(சந்தனவெட்டை) | 56 1/2 ஏக்கர் | வனப் பாதுகாப்பு திணைக்களம் |

மூலம்: கள ஆய்வு (2017.03.16) அடிப்படையில் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட அட்டவணை

**1.7.3 இராணுவ முகாம் அதிகரிப்பு**

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒரு கிலோ மீற்றருக்கு ஒரு பாதுகாப்பு முகாம் என்ற அடிப்படையில் இராணுவ, கடற்படை, விமானப்படை முகாம்கள் அதிகரித்துக் காணப்பட்டன (அட்டவணை: 1.7.3). 2009 உள்நாட்டுப் போர் முறியடிப்பையடுத்து வடக்கு-கிழக்கின் பல பிரதேசங்களிலும் பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்படும் தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. விடுதலைப் புலிகள் மீள்எழுச்சியைத் தடுக்கும் நோக்கம் தவிர்க்க முடியாப் பின்புலமாக இருந்தாலும், இதை வைத்து ஏழை மக்களின் பயிர்ச்செய்கைக் காணிகளை சுவீகரித்து, இராணுவ முகாம்களை அமைக்கவும் அவற்றை மேலும் விஸ்தரிக்கும் முயற்சியிலும் அரசாங்கம் செயற்பட்டமையால், பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் காணி மோதல்களும் அவ்வப்போது இடம்பெற்றன (உதாரணம், புல்மோட்டை மண்கிண்டிமலை). மேலும், ‘அனுமதிப்

பத்திரம் இல்லாதவர் அரச காணிகளை அத்துமீறிப் பிடிக்கிறார்' என்று குற்றச்சாட்டப்பட்டு கைது செய்யப்படும் நிலைமைகளால் இம்மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் தரிசு நிலங்களாகவே காணப்பட்டன.

**அட்டவணை: 1.7.3 இராணுவ முகாம் அதிகரிப்பும் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளும்**

| | காணிப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் | பாதிக்கப்பட்டுள்ள காணிகள் (ஏக்) | பிரச்சினைக்குரிய காரணிகள் |
|---|---|---|---|
| | **குச்சவெளி பிரதேசம்** | | |
| | ஜாயா நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவு | 1 ஏக்கர் (Permit land) | கடற்படை முகாம் - 1 |
| | புடவைக்கட்டு சாகர புரம் | 2 ஏக்கர் (Permit land) | கடற்படை முகாம் - 1 |
| | தோண்டாமுறிப்பு | 50 ஏக்கர் (Permit land) | STF முகாம் |
| | ரசூல் நகர் 13 ஆம் கட்டை | 300 ஏக்கர் (Permit land) | 27 Gajaba Regiment |
| | மண்கிண்டிமலை | 400 ஏக்கர் (Permit land) | Ranveli Naval Detachment |
| | கொக்குளாய் முகத்துவாரம் | 50 ஏக்கர் அரச காணி | Naval Deployment Camp |
| | லைட் ஹவுஸ் ஜின்னாபுரம் | 4 ஏக்கர் அரச காணி | Naval Deployment Camp |
| | பொன்மலைக்குடா | 500 ஏக்கர் (Permit land) | Naval Deployment |
| | யான் ஓயா அணைக்கட்டு | 100 ஏக்கர் (Permit land) | சிவில் பாதுகாப்பு படை (CSD) |
| | **கிண்ணியா பிரதேசம்** | | |
| | உப்பாறு | 8 ஏக்கர் | கடற்படை முகாம்கள் - 2 |
| | பைசல் நகர் - தோனா கடற்கரை | 30 பேர்ச்சஸ் | கடற்படை முகாம்கள் - 2 |

| | | | |
|---|---|---|---|
| | அண்ணல் நகர்-தோனா கடற்கரை | 15 பேர்ச்சஸ் | கடற்படை முகாம் - 1 |
| | பைசல் நகர் - கண்டலடி கிராமம் | 6 ஏக்கர் | இராணுவ முகாம் - 1 |
| | பெரிய பாலம் (பழைய துறையடி) | 1/2 ஏக்கர் | கடற்படை முகாம் - 1 |
| | சூரங்கல் | 5 ஏக்கர் | இராணுவ முகாம் - 1 |
| | குரங்குபாஞ்சான் - மஜீத் நகர் | 3 ஏக்கர் | இராணுவ முகாம் - 1 |
| | **பட்டினமும் சூழலும் பிரதேசம்** | | |
| | கருமலையூற்று (இம்மூன்று முகாம்களும் 1 கி.மீ. தூர இடைவெளிக்குள் அமைக்கப்பட்டுள்ளன) | 500 ஏக்கர் | இராணுவ முகாம் - 1<br>விமானப்படை முகாம் - 1<br>கடற்படை முகாம் - 1 |
| | கன்னியா வெந்நீரூற்று (அரச காணி) | | இராணுவ முகாம் - 1 |
| | சின்னம்பிள்ளச்சேனை | 3 ஏக்கர் (தனியார் காணி) | விமானப்படை முகாம் - 1 |
| | **மூதூர் பிரதேசம்** | | |
| | நாவலடி - இறால்குழி | 30 பேர்ச்சஸ் (தனியார் காணி) | கடற்படை முகாம் - 1 |
| | பாலநகர் | 3 ஏக்கர் | இராணுவ முகாம் - 1 |
| | பாலநகர் (மையவாடி காணி) | 20 பேர்ச்சஸ் | சிவில் பாதுகாப்பு படை |
| | தக்வா நகர் - பஹ்ரியா நகர் | 3 ஏக்கர் | கடற்படை முகாம்கள் - 2 |
| | இறங்குதுறை | 1/2 ஏக்கர் | கடற்படை முகாம் - 1 |

| | | | |
|---|---|---|---|
| | நடுத்தீவு - ஹபீப் நகர் | 20 பேர்ச்சஸ் | கடற்படை முகாம் - 1 |
| | நாவலடி | 1 ஏக்கர் (தனியார் காணி) | கடற்படை முகாம் - 1 |
| | சீனன்வெளியில் | 15 ஏக்கர் | கடற்படை முகாம் - 1 |

மூலம்: கள ஆய்வு (2017.03.16) அடிப்படையில் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட அட்டவணை

**1.7.4 விகாரை காணிக் கோரிக்கை**

*திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்கள் சிலவற்றில் விகாரைக் காணிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது (உதாரணம், புல்மோட்டை). குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புல்மோட்டையில், விகாராதிபதி ஒருவரால் விகாரைக்கு 500 ஏக்கர் வீதம் 3000 ஏக்கர் காணிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது (அட்டவணை: 1.7.4). இக்கோரிக்கையானது, புல்மோட்டையில் வாழ்கின்ற சிங்கள மக்களின் தொகையை விடவும் அதிகமாகும். அவ்வாறே, தோப்பூர் உப பிரதேச செயலகப் பிரிவுக்குட்டபட்ட செல்வ நகர் என்ற கிராமத்திலும் 1000 ஏக்கர் விகாரைக் காணிக் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

**அட்டவணை: 1.7.4 விகாரைக் காணிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள்**

| | **காணிப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேசங்கள்** | **பாதிப்புக்கு உப்பட்டுள்ள காணிகள் (ஏக்)** |
|---|---|---|
| | **புல்மோட்டை** | |
| | பொன்மலைக் குடா (அரிசி மலை) | 500 ஏக்கர் |
| | இரும்படிச்சான் (செம்பிலிய கந்தை) | 500 ஏக்கர் |
| | கண்ணீராவி பிலவு | 500 ஏக்கர் |
| | ஆண்டாங்குளம் | 500 ஏக்கர் |
| | சாத்தானமடு | 500 ஏக்கர் |
| | காட்டுத் தென்னை முறிப்பு | 500 ஏக்கர் |
| | **தோப்பூர்** | |
| | செல்வநகர் | 1000 ஏக்கர் |

மூலம்: கள ஆய்வு (2017.03.16) அடிப்படையில் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட அட்டவணை

### 1.7.5 காணி அபகரிப்பு

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் பல ஏக்கர் காணிகளை அபகரிப்பின் பெயரில் இழந்துள்ளனர். குறிப்பாக, பெரும்பான்மை இனத்தவர்களின் எல்லைப் பிரதேசங்களில் அமைந்துள்ள முஸ்லிம்களின் வேளாண்மைக் காணிகளும் கால்நடை மேய்ச்சல் நிலங்களும் 2009 யுத்த முறியடிப்பைத் தொடர்ந்து கேள்விக்குட்படும், அபகரிக்கப்படும் நிலை ஏற்பட்டது (அட்டவணை: 1.7.5). யுத்த கால இராணுவ சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்வதிலுள்ள அச்சம், பல்வேறு அசௌகரியங்கள் காரணமாக ஆயிரக்கணக்கான வேளாண்மைக் காணிகள் செய்கைக்குட்படுத்தப்படாது தரிசுநிலங்களாகக் காணப்பட்ட சூழலில், இக்காணிகளை அயலிலுள்ள சிங்களவர்கள் அபகரித்தனர் (உதாரணம், கிண்ணியா வாழைமடுக் கண்டம்).

மேலும், யுத்த சூழலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சில முஸ்லிம் குடியிருப்புகள் இடப்பெயர்வையடுத்து தமிழர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன (உதாரணம், தோப்பூர் தாயுப் நகர்). திட்டமிட்ட எல்லைப் பிரிப்பின்போதும் சில முஸ்லிம் பிரதேசங்கள் தமிழ், சிங்கள பெரும்பான்மை பிரதேசங்களுக்குள் உட்படுத்தப்பட்டடையால் தொடர்ச்சியான எல்லைப் பிரச்சினையை இம்மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் அனுபவித்துள்ளனர். உதாரணமாக, தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட வெருகல் மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட தோப்பூரின் எல்லைப் பிரதேசமாகும். நல்லூர், தாயுப் நகர், உப்பூறல், ஹிஜ்ரா நகர், இக்பால் நகர், சீனன்வெளி, உல்லைக்குளம், இத்திக்குளம், சின்னக்குளம் முதலானவை தோப்பூர்-வெருகல்-சேருநுவர ஆகியவற்றுக்குமிடையிலுள்ள எல்லைப் பிரதேசங்களில் சிலவாகும். யுத்த காலங்களில் வெருகல் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் தோப்பூரின் எல்லைப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் உயிருக்குப் பயந்து நகர்ப் பகுதிகளில் குடிபுகுந்தனர். இந்த இடப்பெயர்வை சாதகமாகப் பயன்படுத்திய வெருகல் மக்கள்,
விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் முஸ்லிம்களின் காணிகளை அபகரித்து, தமது குடியிருப்புகளையும் விசாலமாக்கிக் கொண்டனர்.

**அட்டவணை: 1.7.5 அடாத்தாக பறிமுதல் செய்யப்பட்ட காணிகள்**

| | காணிப் பிரச்சினையை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் | பாதிக்கப்பட்டுள்ள காணிகள் (ஏக்) | பிரச்சினைக்குரிய காரணிகள் |
|---|---|---|---|
| | **திருகோணமலை நகர்** | | |
| | கன்னியா கிராமம் | 8 ஏக்கர், 3 ரூட், 26 பேர்ச்சஸ் பள்ளிவாசல் காணி | வழக்குப் பதிவு |
| | **புல்மோட்டை** | | |
| | 14 ஆம் கட்டை | 30 ஏக்கர் | சிங்கள குடியேற்ற முயற்சி |
| | **தம்பலகாமம்** | | |
| | இக்பால் நகர் (பள்ளிவாசல் காணி) | 2 ஏக்கர் | பிரதேச செயலாளரால் தடைவிதிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | மீரா நகர் பாடசாலை மைதானத்தின் ஒரு பகுதி | 2 ஏக்கர் | தமிழ் சகோதரர் உரிமை கோரல் |
| | **கிண்ணியா** | | |
| | வாழைமடு | 1200 ஏக்கர் | சிங்களவர்கள் ஆக்கிரமிப்பு |
| | **மூதூர்** | | |
| | கண்டாக்கர் தோட்டம் | 51 ஏக்கர் | தமிழ் கிராம மயப்படுத்தும் முயற்சி |
| | வவுனாவில் கண்டம் (படுகாடு) | 300 ஏக்கர் | சட்டவிரோத மண்ணகழ்வுக்காக தடைவிதிக்கப்படுகிறது |
| | பொன்னாங்கேணி | 400 ஏக்கர் | மூதூர்-சேருவில எல்லைப் பிரச்சினையால் தரிசு நிலம் |
| | குருவித்தீவு | 45 ஏக்கர் | இறால்குழி தமிழர்கள் மீள்குடியேற்றத்திற்கு தடையேற்படுத்தி வருகின்றனர் |
| | பன்வெட்டான் | | மேச்சல்தரை பிரச்சினை |
| | **தோப்பூர்** | | |
| | தாயுப் நகர் | 350 ஏக்கர் | தாயுப் நகர் முஸ்லிம்களும் நல்லூர் தமிழர்களும் உரிமை கோரல் |
| | ஹிஜ்றா நகர் | 160 ஏக்கர் | தமிழ் கிராம மயப்படுத்தும் (உப்பூறல்) முயற்சி |
| | உல்லைக்குளம் | ) ஏக்கர் | (தமிழ்-முஸ்லிம்) இரு சமூகங்கள் உரிமை கோரல் |
| | இக்பால் நகர் | 30 ஏக்கர் | (தமிழ்-முஸ்லிம்) இரு சமூகங்கள் உரிமை கோரல் |
| | சின்னக்குளம் | 90 ஏக்கர் | (தமிழ்-முஸ்லிம்) இரு சமூகங்கள் உரிமை கோரல் |
| | இத்திக்குளம் | 60 ஏக்கர் | (தமிழ்-முஸ்லிம்) இரு சமூகங்கள் உரிமை கோரல் |

மூலம்: கள ஆய்வு (2017.03.16) அடிப்படையில் ஆய்வாளர்களால் தயாரிக்கப்பட்ட அட்டவணை

### 1.7.6 இன ரீதியான நிருவாகம்

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைக்கு இன ரீதியான நிருவாகக் கட்டமைப்பும் ஒரு காரணியாகும். தமிழ், சிங்கள பெரும்பான்மை நிர்வாக ஆதிக்கம் இங்கு செல்வாக்குச் செலுத்துகிறது. திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மிகக் கூடுதலான காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்ற குச்சவெளி பிரதேசத்தில் இந்நிலைமையை தெளிவாக அறிந்து கொள்ளலாம். குச்சவெளி பிரதேசத்தில் 25,399 முஸ்லிம்களும், 12,013 தமிழர்களும், 691 சிங்களவர்களும் வாழ்கின்றனர் (District Planning Secretariat, 2015). ஏனைய சிறுபான்மை இனத்தவர்களை விடவும் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லிம்களே இங்கு அதிகமான காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர்.

குச்சவெளி பிரதேச செயலக வரலாற்றுத் தொடரில் இதுவரை 27 பிரதேச செயலாளர்கள் கடமையாற்றியிருக்கிறார்கள்ளூ எம்.எஸ்.எஸ். இப்றாஹிம் என்பவரைத் தவிர, மற்றைய 26 பேரும் சகோதர தமிழினத்தைச் சேர்ந்தவர்களே அமர்த்தப்பட்டனர் (மூலம்: குச்சவெளி பிரதேச செயலக பெயர்ப்பலகை). பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், காணி உத்தியோகத்தர் என மிக முக்கியமான பொறுப்புகளை வகித்தவர்களெல்லாம் சகோதர இனத்தைச் சேர்ந்தவர்களே. எனவே, குச்சவெளிப் பிரதேசத்தில் சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக காணி உரிமை கோரி விண்ணப்பித்த காணிகளுக்குக் கூட முறையான எந்த ஏற்படும் செய்து கொடுக்கப்படாமை, இவர்களது காணி தொடர்பான சரியான பதிவுகள் இம்மாவட்டத்திலுள்ள அநேகமான பிரதேச செயலகங்களில் இல்லாமலிருப்பது, இம்மக்கள் கொடுக்கின்ற முறைப்பாடுகளைப் பெற்று, ஆவணப்படுத்தி, உரிய இடத்துக் கொண்டு சேர்த்து இவர்களுக்கான உரிமத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அதிகாரிகள் அசிரத்தையாக இருந்துள்ளமை போன்ற காரணங்களை ஆய்வு செய்தமையூடாக திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் இன ரீதியாக புறக்கணிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

### 1.7.7 ஓருதலைப்பட்சம்

இலங்கையில் ஆறு வகையான காணிச் சட்டங்கள் காணப்படுகின்றன. 1. காணி நிர்ணய கட்டளைச் சட்டம் 2. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் 3. அரச காணி கட்டளைச் சட்டம் 4. ஆட்சியை மீளப்பெறுதல் சட்டம் 5. காணிச் சுவீகரிப்புச் சட்டம் மற்றும் 6. காணி அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்பன அவை (வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகம், 2005). சரியாகப் பார்த்தால், காணிச் சட்டங்கள் மக்களுக்கு பாதுகாப்பாகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இச்சட்டங்கள் முறையற்ற விதத்தில், சில ஏற்பாடுகளை சாதகமாகக் கொண்டு காணிகள் சுவீகரிக்கப்படும்போது மக்கள் காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது.

உதாரணமாக, காணிச் சுவீகரிப்புச் சட்டம் 4(1) உறுப்புரையில், அரசாங்கம் பொதுத் தேவைக்காக ஒரு காணியை சுவீகரிக்க நாடினால் அக்காணி பற்றிய முழு விபரங்களையும் குறிப்பிட்டு, உரிமையாளருக்கு அறிவித்தல் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறுகின்ற சட்டம் இன்னோர் இடத்தில், ''பெயரும் முகவரியும் கண்டுபிடிக்க முடியாத அல்லது உண்மையாகவே அறிய முடியாத காணி உரிமையாளருக்கு இப்பிரிவின் ஏற்பாட்டின் கீழ் அறிவித்தல் வழங்குதல் அவசியமானதல்ல'' என்று குறிப்பிடுகிறது (வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகம், 2005: 237).

நியாயபூர்வமாக ''பெயரும் முகவரியும் அறியக்கிடைக்கவில்லை'' என்பதற்கப்பால் சுவீகரிப்பாளர்கள் தமக்கு வேண்டிய விதத்தில் செயற்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, கருமலையூற்றுப் பள்ளிவாசல் காணிச் சுவீகரிப்பு விடயத்தில், ''காணி உரிமை கோருபவரின் பெயர், முகவரி அறியப்படவில்லை'' என்ற வாசகத்தை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் கையாண்டுள்ளார் (பிரதேச செயலாளர், 2017.02.15). காணி அமைவிடம், வரைபட இலக்கம் ஆகியவற்றை தெளிவாக அறிவித்துள்ள பிரதேச செயலாளருக்கு காணி உரிமையாளர் (தனியார் காணி) பெயர், விலாசம் ஆகிய விபரங்களை அறியாமலிருக்க வாய்ப்பில்லை. மற்றையது, பிரதேச செயலாளர் சுவீகரிக்கத் திட்டமிட்ட காணி அமைவிடம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர்

பிரிவு-வெள்ளைமணல் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டது. ஆனால், துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டது அப்பாலுள்ள நாச்சிக்குடா கிராம உத்தியோகத்தர் பிரிவிலாகும்.

அவ்வாறே, ஒரு பிரதேசத்திலுள்ள மக்கள் வேறொரு பிரதேசத்தில் குடியேற்றம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில், ''அரச காணியொன்றை ஒதுக்கும்போது அக்கிராமத்தில் வாழ்பவர்களின் தேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும், பிரதேச மக்களின் கிராம விஸ்தரிப்புக்கு அல்லது வேறு தேவைகளுக்கு உரிய முறையில் காணியை வழங்கிய பின்னரே குடியேற்றத் திட்டத்தை அமைக்க வேண்டும்'' என காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் சொல்கிறது (வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகம், 2005). ஆனால், நடைமுறையில் பூர்வீக மக்களின் எதிர்காலம் கேள்விக்கிடமாவது கருத்தில் கொள்ளப்படவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட கந்தளாய், அல்லை, மொரவெவ, பதவியா ஆகிய சிங்களக் குடியேற்றத் திட்டம் பூர்வீக முஸ்லிம், தமிழர்களின் இனச் செறிவிலும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியமை இதற்கு எடுத்துக்காட்டாகும் (முஹியத்தீன், 1985:31). இதன் பாதக விளைவுகளை இம்மாவட்டத்திலுள்ள சிறுபான்மை மக்கள் மிக நீண்டகாலங்களாக அனுபவித்துள்ளனர்.

எனவே, சட்டம் மக்களுக்கு நன்மையளிக்கிறதுளூ அச்சட்டத்தைப் பிரயோகிப்பவர்களின் ஒருதலைப்பட்ச கையாள்கையால் மக்கள் காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர்.

### 1.7.8 அதிகார துஷ்பிரயோகம்


அதிகாரத் துஸ்பிரயோகம் காணிப் பிரச்சினைக்கு ஒரு காரணி. எடுத்துக்காட்டாக, தொல்பொருள் திணைக்களத்திற்குரிய இடங்கள் இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் சொந்தமானவை. எதிர்கால சந்ததிகளின் அறிவுத் தேடலுக்கு அவற்றைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திற்குண்டு. பிரத்தியேக சட்டங்கள், விதிமுறைகள், நடைமுறைகள் இருந்தாலும் இத்திணைக்களத்திற்கு சொந்தமான இடங்களில் வேறு தனிப்பட்ட குழுவினர் புதிதாக புத்தர் சிலைகளைப் பதித்து பௌத்தமயமாக்கும் செயலுக்கு தொல்பொருள் திணைக்களம் வசதியளிக்கிறது (உதாரணம், மூதூர் 64 ஆம் கட்டை ஜபல் மலைத்தொடர் புத்தர் சிலை விவகாரம்). மலையொன்றில் புத்தர் சிலை நிறுத்தப்படுவதினால் இருவகையான பிரச்சினைகளுக்கு பூர்வீக மக்கள் முகங்கொடுத்தனர். ஒன்று, காணிச் சுவீகரிப்பிற்கும் பெரும்பான்மை இனக் குடியேற்றத்திற்கும் காரணியாக அமைந்தது. இரண்டு, புதிய குடியேற்றம் பூர்வீக மக்களின் இனச் செறிவிலும் அரசியல் பிரதிநிதித்துவத்திலும் அபிவிருத்தியிலும் பாரிய தாக்கத்தைச் செலுத்தியது.

சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ள காணிகள், பிரித்தானியர் கால உறுத்திப் பத்திரமுள்ள காணிகள், நில அளவைத் திணைக்களத்தில் பதிவிலுள்ள காணிகள், வழக்குத்தாக்கல் மூலம் நீதிமன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்ட காணிகளைக் கூட அரசாங்க அதிகாரிகள் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுவிக்கவில்லை. கால இழுத்தடிப்பினூடாக இம்மக்களை ஏமாற்றியே வந்துள்ளனர் (உதாரணம், கருமலையூற்று பள்ளிவாசல் காணி மற்றும் கன்னியா வெந்நீரூற்றுக் கிராம பள்ளிவாசல் காணி).

### 1.7.9 பொதுமக்கள் அறிவீனம்

காணி உரிமம், காணி அனுமதிப் பத்திரம், காணிச் சுவீகரிப்பு முதலானவை குறித்த மக்கள் தெளிவின்மைகளும் காணிப் பிரச்சினை மேலெழக் காரணமாகும். அரச காணியொன்றைக் கையாள்வது குறித்த அடிப்படை அறிவுகூட பெரும்பாலான காணி உடைமையாளர்களிடம் காணப்படவில்லை. அரசாங்கம் அனுமதிப் பத்திரமொன்றை வழங்கி விட்டால், அக்காணியின் முழு உரிமையை தான் பெற்றுவிட்டேன் என்பதே இவர்களின் நிலைப்பாடு. துரதிர்'டம், வருடாந்த உத்தரவுப் பத்திரங்களைக் கூட (annual permit) உறுதிப் பத்திரத்தின் தரத்தில் வைத்துப் பார்க்கின்ற மனோபாவம் அதிகமாகவர்களிடம் காணப்படன. இதனால் திருகோணமலை மாவட்டத்தில் LDO அனுமதிப் பத்திரத்திற்கு மாற்றப்படாத அதிக எண்ணிக்கையிலான வருடாந்த உத்தரவுப் பத்திரங்கள் காணப்பட்டன (உதாரணம், கிண்ணியா வாழைமடு). எனவே, அரச காணிச்

சட்டங்களை மக்கள் அறிந்து செயற்படும்போது தேவையற்ற காணிப் பிரச்சினைகள் ஏற்படுவதிலிருந்தும் பாதுகாப்புப் பெற முடியும்.




**வரைபடம்: 1.7.1 காணிப் பிரச்சினைக்குரிய காரணிகளும் அவற்றின் வீதங்களும்**

கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட முடிவுகள் தனித்தனியாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அவற்றினூடாகப் பெற்ற தரவுகளின் அடிப்படையில், திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினைக்குரிய காரணிகளையும் அவற்றின் வீதங்களையும் ஒட்டுமொத்தமாகக் காட்டும் வரைபடம் மேலே தரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், காணிப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் பல்வேறு காரணிகளும் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட காணிப் பிரச்சினைகளின் அளவுகளும் இனங்காணப்பட்டன. குச்சவெளி மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணி உரிமம் வழங்கப்படாமைக் காரணி 80% இல் செல்வாக்குச் செலுத்துவதும், அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல் காரணி கிண்ணியா, திருகோணமலை நகர், புல்மோட்டை, நிலாவெளி, மூதூர் போன்ற பிரதேசங்களில் 50% இல் செல்வாக்குச் செலுத்துவதும் கண்டறியப்பட்டன.

இராணுவ முகாம் அதிகரிப்புக் காரணியும் மிகுந்த 70% மான பாதிப்பை குச்சவெளி, கிண்ணியா, பட்டினமும் சூழலும், மூதூர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஏற்படுத்தியுள்ளது போன்று, விகாரைக் காணிக் கோரிக்கை மூலம் புல்மோட்டை, தோப்பூர் ஆகிய இரு பிரதேசங்கள் 60% இற்கும் மேற்பட்ட பாதிப்புகளையும், அபகரிப்புக் காரணி மூலம் 40% இற்கும் மேலான பாதிப்புகளை மூதூர், தோப்பூர் ஆகிய பிரதேசங்களில் ஏற்படுத்தியுள்ளமையும் இனங்காணப்பட்டன.

**2. ஆய்வு முடிவுரை**

2009 யுத்த முறியடிப்பையடுத்து திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள், சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கும் குறையாத காணிப் பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளனர். இவற்றில், 80% மானவை காணி உரிமம் இல்லாமையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளாகும். இக்காணிப் பிரச்சினைகளை மூன்று வகைக்குள் உட்படுத்தப்பட்டன. குடியிருப்பு மற்றும் விவசாய-தோட்டக் காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் இல்லாமையால் ஏற்படும் பிரச்சினைகள், அனுமதிப் பத்திரமுள்ள

காணிகளுக்கு அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படாமையால் ஏற்படும் பிரச்சினைகள், அரசாங்கத்தின் எல்லைப்படுத்தலுக்குள் அகப்பட்டுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகள் என்பன அவை.

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு தடவைகளுக்கும் மேலாக காணிக் கச்சேரிகள் இடம்பெற்றும் இங்கு வாழ்கின்ற முஸ்லிம்கள் காணி உரிமம் வழங்கப்படாது தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். யுத்த காலம், எல்லைப் பிரதேசங்களிலிருந்த குடியிருப்பு நிலங்களும் விவசாய-தோட்டக் காணிகளும் பாழடைந்து, தரிசு நிலங்களாகவும் காடுகளாகவும் காணப்பட்டிருந்த சூழலில் வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் எல்லைப்படுத்தலுக்குள்ளும் இராணுவப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் கட்டுப்பாட்டிற்குள்ளும் உட்படுத்தப்பட்டமையால், இக்காணிகளை விடுவிப்பதற்கு அவற்றுக்குரிய சட்ட ரீதியான ஆவணங்கள், உரித்துரிமைகள் இல்லாததால் பெரும் சவால்களையே சந்திக்க நேர்ந்தது.

இவ் ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவாக காணிப் பிரச்சினையைத் தோற்றுவிக்கும் ஒன்பது காரணிகள் இனங்காணப்பட்டன: காணி உரிமம் வழங்கப்படாமை, அரசாங்கத்தின் எல்லைப்படுத்தல், இராணுவ முகாம் அதிகரிப்பு, விகாரைக் காணிக் கோரிக்கை, காணி அபகரிப்பு, இன ரீதியான நிருவாகம், ஒருதலைப்பட்சம், அதிகார துஷ்பிரயோகம், பொதுமக்கள் அறிவீனம் என்பன அவை. பொதுவாகப் பார்த்தால், இம்மாவட்டத்தில் காணப்படும் எல்லா வகையான காணிப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருப்பது காணி உரிமம் இல்லாதிருப்பதாகும். காணி உரிமை மறுப்பு மக்களுக்கெதிரான சட்டச் சிக்கல்களைத் தோற்றுவித்ததோடு, அரசியல் தலையீடுகளாலும் இனவாத சிந்தனைகளாலும் காணிப் பிரச்சினைகள் மேலெழுவதற்கு காரணமாகவும் அமைந்தது.

**8. பரிந்துரைகள்**

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபட்டவை. (1) பிரதேச செயலக மட்டத்தில் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள், (2) சட்டத்தைப் பயன்படுத்தி தீர்க்கக்கூடிய பிரச்சினைகள், (3) பாதுகாப்புத் தரப்புடன் பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் என மூன்று நிறுவனங்களுடன் இப்பிரச்சினைகள் சம்பந்தப்படுகின்றன. அந்தவகையில், இம்மாவட்டத்தில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளாகவோ, பரிந்துரைகளாகவோ பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

01. திருகோணமலை மாவட்டத்தில் குறைந்த சனத்தொகையைக் கொண்டுள்ள பிரதேசங்களுக்கு கூடிய நிலப் பரப்பும், கூடிய சனத்தொகையைக் கொண்டுள்ள பிரதேசங்களுக்கு குறைந்த நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளன. 8,563 சனத்தொகையைக் கொண்டுள்ள கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவுக்கு 285 ச.கி. நிலப்பரப்பும், 73,654 சனத்தொகையைக் கொண்டுள்ள கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு 146.9 ச.கி. நிலப்பரப்பும் பிரிக்கப்பட்டுள்ளமை எடுத்துக்காட்டாகும் (District Planning Secretariat, 2015). எனவே, அரசாங்கம் சிறந்த காணிக் கொள்கையொன்றைப் பின்பற்ற முன்வர வேண்டும்.

02. காணிச் சட்டம், சுற்றுநிருபம் அல்லது வர்த்தமானி அறிவித்தல் ஆகியவை அறிமுகம் செய்யப்படுவது மக்களின் காணிகளைப் பாதுகாப்பதற்கே. நாட்டின் சகல இன மக்களையும் கவனத்தில் கொண்டு பொதுப்படையாக இயற்றப்படுகின்ற சட்டங்கள் சில பிரதேசங்களுக்கு அனுகூலமாகவும் இன்னும் சில பிரதேசங்களுக்கு பிரதிகூலமாகவும் அமையக்கூடும். யுத்த காலத்தில் உருவாக்கப்பட்ட சுற்றுநிருபங்கள் அந்தக் காலத்தை மட்டும் கவனத்தில் கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால், இன்றுள்ள கால சூழலுக்கு ஏற்றாற்போல் அவை திருத்தியமைக்கப்பட்டால் மாத்திரமே சட்டத்துடன் முரண்படுகின்ற பிரச்சினைகளுக்கு தகுந்த தீர்வைப் பெற முடியும். எனவே, குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அறிக்கை சமர்ப்பித்து பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு தகுந்தாற்போல் குறித்த சுற்றுநிருபத்தை அல்லது வர்த்தமானி அறிவிப்பை திருத்தியமைக்கும் உரிமை மக்களுக்குரியது.

இவ்வாறு திருத்தியமைக்கப்பட வேண்டிய சுற்றுநிருபங்களில் ஒன்றாக, வனப் பாதுகாப்பு மற்றும் சூழல் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2001/5 ஆம் இலக்க சுற்றிக்கை காணப்படுகிறது. 2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கை நடைமுறையில் இருந்த காலப் பிரிவில், அரசாங்கத்தின் எல்லைப்படுத்தலுக்குள் உட்படுத்தப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்து, இதனால் ஏற்படும் பாதிப்புக்களை, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், தனியார் காணியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் 2016/5 ஆம் இலக்க, கால விதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தினூகக் கொண்டு வந்தமைபோான்று, அரச காணிகளில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வாக, கால விதிப்பு அடிப்படையில் 2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கையிலும் சில திருத்தங்களைக் கொண்டு வர முடியும்.

03. 2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், "எஞ்சிய காடுகளைப் பாதுகாக்கும் பொறுப்பு" ஒப்படைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பொறுப்பளிக்கப்பட்ட இத்திணைக்களங்களினால் எல்லைப்படுத்தப்பட்டுள்ள பல பிரதேசங்கள் 'காடு' என்பதையும் தாண்டி கிணறு, கல்வீடுகள் அமையப் பெற்றுள்ள குடியிருப்புகள், விவசாயம் செய்த அடையாளங்கள் (வரம்புகள், நீண்டகாலத்து மரங்கள்) காணப்படுகின்ற காணிகளாகவே காணப்படுகின்றன. (உதாரணம், புல்மோட்டை அரிசிமலைப் பகுதி).

வனப் பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் சாதாரண பற்றைகள், கீழ் வளரிகள் காணப்படும் இடங்களையும் தமது எல்லைப்படுத்தலுக்குள் உட்படுத்தியுள்ளமையும் குறிப்பாகும். எனவே, மாவட்ட ரீதியில் சட்டத்தரணிகளைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு, கள ஆய்வு மூலம் குடியிருப்பு மற்றும் விவசாயக் காணிகள் அடையாளம் காணப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதினூடாக சாதக முடிவுகள் பெறப்படுமானால் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கிலுள்ள அதிகமான பிரதேசங்களில் நிலவும் காணிப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வர முடியும்.

04. நகர சபை, மாநகர சபை அதிகாரங்களுக்குட்பட்ட பிரதேசங்கள், 'அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள்' என்ற சட்ட வரையறைக்குள் வருவதால், அரச காணி கட்டளைச் சட்டத்தின் மூலம் இப்பிரதேச மக்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலேயே அரச காணியை அல்லது உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வர். இதன்படி, பட்டினமும் சூழலும், கிண்ணியா ஆகிய நகர சபைகளுக்குட்பட்டுள்ள பிரதேசங்களில், LDO சட்டத்தின் கீழ் இலவசமாக காணி வழங்க முடியாத நிலை காணப்படுகின்றதுளூ இங்கு நீண்டகால குத்தகை அப்படையிலேயே அரசாங்கம் காணி வழங்க முடியும்.

துரதிர'டமாக, இவ்விரு சபைகளுக்குட்பட்டுள்ள, பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற, சமுர்த்தி பெறுகின்ற வறிய மக்களும் கூட இந்த சட்டத்திற்குள் உள்ளடங்கப்படுவதால், LDO சட்டத்தின் கீழ் இலவசக் காணியொன்றைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இவ்வறிய மக்கள் இழக்கின்றர் (உதாரணம், கிண்ணியா-உப்பாறு, பட்டினமும் சூழலும்-முத்துநகர் கிராம மக்கள்). 2015/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறுபவர்கள் குறைந்த கட்டன விதிப்பு (சலுகை) மூலம் அரச காணியொன்றைப் பெற முடியுமாவிருந்தாலும், ஒரு பிராந்தியம் பிரதேச சபையாக இருந்து நகர சபையாகவோ அல்லது மாநகர சபையாகவோ தரமுயர்த்தப்படுவதற்கு முன்னரே, அப்பிரதேசத்திலுள்ள காணிகளுக்குரிய உரிமங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வழிவகை செய்து கொடுக்கப்படல் வேண்டும். இது காணிப் பிரச்சினை எழாமல் தடுப்பதற்குரிய ஒரு வழிமுறையாகவும் அமையும்.

05. மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று, ஆவணப்படுத்தி, காணி உரிமை பெற்றுக் கொடுப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன ரீதியாக பாரபட்சம் காட்டியுள்ளமை தெரிகிறது (மூலம்: கள ஆய்வு, 2017.03.16). மாவட்ட அபிவிருத்திக் குழு (DCC) கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் சில மாவட்ட செயலக மட்டத்தில் தணிக்கை செய்யப்படுவதும், மாவட்ட செயலக மட்டத்தில் எடுக்கப்படுகின்ற சில தீர்மானங்கள் மாகாண அல்லது மத்திய அரசு மட்டத்தில் தணிக்கை செய்யப்படுவதுமுண்டு. எதுவாக இருந்தாலும், ஒரு பிரதேச செயலகம் மனிதநேயத்தோடு, நேர்மையாக, சமூக வேறுபாடுகளுக்கப்பால் தனது கடமையைச் செய்தாலே 90% மான காணிப் பிரச்சினைகளுக்கு பிரதேச செயலக வளாகத்திற்குள்ளேயே தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

06. உள்நாட்டு யுத்தம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ காணி அனுமதிப் பத்திர மூலப் பிரதிகள் பிரதேச செயலகங்களில் இல்லாதிருந்தமையால் ஒரு காணிக்கு இரண்டு நபர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலைமைகளும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் உண்மை நிலை ஆராயப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்க திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகமும் முன்வர வேண்டும்.

07. காணிப் பிரச்சினை பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடலாம். இந்த மாறுபாட்டுக்கேற்ப தீர்வு நோக்கிய அணுகுமுறையும் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். சட்டத்தால் தீர்க்கக் கூடிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையோ, பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைக்கு சட்டத்தையோ பயன்படுத்துவதன் மூலம் காணிப் பிரச்சினைக்குரிய தீர்வைப் பெற முடியாது.

08. திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம் பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படுவதன் மூலந்தான் அவர்களின் காணிப் பிரச்சினைகள் தீருமென்ற நிலைப்பாடு காணப்படுமென்றால், அப்பிரதேச செயலகங்களில் முஸ்லிம் பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படுவது குறித்த தேவையும் கோரிக்கையும் அம்மக்களுக்குரிய உரிமைகளாகும்.

**உசாத்துணை நூல்கள்**

District Planning Secretariat, (2015). *Statistical Hand Book – 2015.* Trincomalee: District Planning Secretariat, Kachcheri.

வடக்கு-கிழக்கு மாகாண காணி நிர்வாகம், (2005). *அரச காணி தொடர்பான நடவடிக்கைக் கோவை.* திருகோணமலை: காணி நிர்வாகத் திணைக்களம் வடக்கு-கிழக்கு மாகாணம்.

கனகசபாபதி சரவணபவன், (2003). *வரலாற்றுத் திருகோணமலை.* Sri Lanka: Trinco Publishers, 346, Anpuvalipuram, Trincomalee.

முஹியத்தீன் எம்.ஐ.எம்., (2008). *கிழக்கிலங்கை முஸ்லிம் அரசியல், இன முரண்பாடு, புறக்கணிப்பு.* கொழும்பு: முஸ்லிம் உரிமைகள் மன்றம்.

தொல்பொருளியல் திணைக்களம், (2015). *செயற்பணி அறிக்கை-2015.* தொல்பொருளியல் திணைக்களம்: செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு (திட்டமிடல் பிரிவு).

பதிப்பாசிரியர்கள் ஜோர்ஜ் ப்fரெக்ஸ், பார்ட் க்ளெம், (2004). *பல்வகையினைக் கையாளுதல்: இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல்.* நேதர்லாந்து: நேதர்லாந்து சர்வதேச உறவுகள் நிலையம் க்ளின்ஜெண்டால்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், (2013). *வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முரண்பாட்டுக்குப் பிந்திய, அரச காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது மீதான துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் (காணிச் சுற்றுநிருபம்- 2013/01).*

முஹியத்தீன், எம்.ஐ.எம். (1985). *இலங்கையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.*

வனவள மற்றும் சூழல் விவகார அமைச்சு, (2001.08.10). *2001/5 ஆம் இலக்க சுற்றறிக்கை.*

வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றல்-2016.

ஜனாதிபதி அலுவலகம், (2014.10.10). *இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை (1884 ஆம் இலக்க).*

ஜனாதிபதி அலுவலகம், (2016.04.29). *2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கால விதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.*

பிரதேச செயலாளர் அருள்ராஜ் ஜே.எஸ்., (2017.02.15). *அறிவித்தல் கடிதம். திருகோணமலை: பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம்.*

https://bit.ly/3a37fm5